DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 140/2017

List of Witness : Lw9

Prosecution Witness : PW8

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மருத்துவர் சிவசெல்வி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | திருமலைச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 22/08/2024

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் தற்போது ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் 17.05.2016ம் தேதி அன்று காலை 11.30மணிக்கு பணியில் இருந்த போது 70 வயது கருப்பாத்தாள் என்பவர் தன்னை ஆறு தெரிந்த நபர்கள் 17.05.2016ம் தேதி அன்று காலை 10.00மணிக்கு தனது வீட்டில் வைத்து தப்பையால் அடித்தார்கள் என கூறினார். அவரை பரிசோதனை செய்த போது வெளிக்காயங்கள் எதுவும் காணப்படவில்லை. அவருக்கு உடல்முழுவதும் வலியுள்ளதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கப்பட்டது. அவரை மேல்சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவரது சிகிச்சை சம்பந்தமான மருத்துவ பதிவுகள் காணப்படவில்லை. எனவே அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து கருத்துரை வழங்க இயலாது என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய சான்று நான் வழங்கியது தான். **விபத்து பதிவேட்டுடன் கூடிய சான்று அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னைவிசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

சிகிச்சைக்கு வந்த நபருக்கு தப்பையால் அடித்ததற்கான அடையாளமோ, வீக்கமோ காணப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வலியிருப்பதாக சிகிச்சைக்கு வந்த நபர் சொன்னதன் பேரில் பதிவு செய்துள்ளேன். திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றார்களா என்று எனக்கு தெரியாது.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

P K DHAMAYANTHI
Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.08.22 17:36:16 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 22/08/2024